சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் மிகுந்த அக்கறையோடு – மக்களிடம் காவல்துறையினர் கனிவாக நடந்து

நேர்மையான சேவையை விரைந்து வழங்க வேண்டும்!

காவல் துணை கண்காணிப்பாளர்களின் பயிற்சி நிறைவு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டுரை!

சென்னை, ஜூலை 20-

சென்னை, ஊனமாஞ்சேரி, தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நேற்று முன்தினம் (18.7.2025) நடைபெற்ற காவல் துணை கண்காணிப் பாளர்களின் பயிற்சி நிறைவு அணி வகுப்பு விழாவில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயி லாக ஆற்றிய உரை வருமாறு:-

காவல்துறைக்கு நேரடி காவல் துணை கண்காணிப்பாளராக தேர்வு செய்யப்பட்டு, கழக அரசால் பணி நிய மன ஆணை வழங்கப்பட்டு, ஓராண்டு சிறப்பான பயிற்சியை முடித்து, இன்று உடல் வலிமை, மன உறுதி மிக்கவர் களாக நீங்கள் களத்துக்குச் செல்லப் போகிறீர்கள் என்பது பெருமைக்குரிய நிகழ்வு.

பயிற்சி முடித்து பணியில் இணைவோருக்கு வாழ்த்துகள்!

வலுவான அடிப்படை பயிற்சியை முடித்து, ஒன்பது பெண் அதிகாரிகள் உட்பட 24 காவல் துணைக் கண் காணிப்பாளர்களும் தங்களுடைய பணியிலும், வாழ்விலும், ஒளிமய மான ஏற்றத்தை கண்டிட மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுக்களை யும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் அதிகாரிகள் உயர்தரமான பயிற்சியை பெறவேண்டும் என்ற நோக்கத்தில், முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்கள் 2008ல் 129 ஏக்கர் பரப் பளவில், இந்த பரந்து விரிந்த தமிழ் நாடு காவல் உயர் பயிற்சியகத்தைத் தொடங்கி வைத்தார்.

சென்னை, ஊனமாஞ்சேரி, தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நேற்று முன்தினம் (18.7.2025) நடைபெற்ற காவல் துணை கண்காணிப்பாளர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக உரையாற்றினார். இவ்விழாவில், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை இயக்குநர், பயிற்சி (பொறுப்பு) மற்றும் தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தின் இயக்குநர் சந்தீப் ராய் ராத்தோர், தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தின் கூடுதல் இயக்குநர் திருமதி. பி.சி. பி.சி. தேன்மொழி. துணை இயக்குநர் (பயிற்சி) து.பெ. சுரேஷ்குமார், துணை இயக்குநர் (நிர்வாகம்) முனைவர் த. செந்தில் குமார் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இங்கே பலவகை சட்டப்பயிற்சி, புல னாய்வு நுணுக்கம், கணினிசார் குற் றங்களைத் தடுக்கின்ற சிறப்புப் பயிற்சி, உளவியல் பயிற்சி, பொருளாதார குற் றங்கள், பெண்கள் மற்றும் குழந்தை களுக்கு எதிரான குற்றங்களை சிறப் பாக புலனாய்வு செய்கின்ற திறன், ஆயுதப் பயிற்சி போன்ற அனைத்து வகையான பயிற்சிகளையும் பெற்று, எந்த சவால்களையும் எதிர்கொள்ளு கின்ற திறனுடன் நீங்கள் களத்துக்குச் செல்வது பெருமைமிக்க தருணம். இந்த காவல் உயர் பயிற்சியகத்தில் இதுவரை 5 ஆயிரத்து 55 நேரடி உதவி ஆய்வாளர்களுக்கும், 297 காவல்துறை கண்காணிப்பாளர்களுக் கும் அடிப்படையான பயிற்சிகள் அளிக் கப்பட்டி ருக்கிறது.

> **“உயர் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். அதில் நீங்கள் எல்லாம் அப்டேட்ஆகிக் கொள்ள வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் அறிவியல் சார்ந்த விசாரணை நடைமுறைகளில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.”**

அறிவியல் சார்ந்த விசாரணை நடைமுறை வேண்டும்!

மேலும், கடந்த வாரம் 2 ஆயிரத்து 452 காவலர்கள், அடிப்படைப் பயிற் சியை முடித்து காவல் பணியில் சேர்ந் திருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் பணி என்பது மக்கள் பிரச்சி னைகளை நேரடியாக தீர்த்து வைக் கின்ற மிக உன்னதமான பணி. ஒவ் வொருவரும் பொதுமக்களிடம் கனிவாக, மரியாதையாக நடந்து, அவர்களுடைய குறைகளை பொறு மையாக கேட்கவேண்டும். அவர் களுக்கு நியாயமான, நேர்மையான சேவையை விரைந்து வழங்க வேண்டும்.

உயர் தொழில்நுட்பங்களை பயன் படுத்த வேண்டும். அதில் நீங்கள் எல்லாம் அப்டேட்டாகிக் கொள்ள வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் அறிவியல் சார்ந்த விசாரணை நடை முறைகளில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும்.

எப்போதும் பணியில் ஃபிட்டாக இருக்க வேண்டும்!

ஃபீல்டுக்கு செல்கின்ற இந்த நேரத் தில், எப்படி ஃபிட்டாக இருக்கிறீர்களோ, அதேபோல, நீங்கள் எப்போதும் ஃபிட் டாக இருக்கவேண்டும். பணிச்சுமை களுக்கு இடையில், நீங்கள் உங்கள் உடல்நலத்தையும் பார்த்துக் கொள்ள வேண்டும். குடும்பத்துடன் நேரம் செல விட வேண்டும். காவல் துறையில் சிறப்பாக, நேர்மையாக பணியாற்றி, நீங்கள் மேலும், மேலும் பதவி உயர் வுகளைப் பெற்று, மக்கள் சேவையில் சிறந்து விளங்க வாழ்த்துகிறேன்!

நான் மீண்டும் உங்களை சந்திக் கும்போது, ஃபீல்டுக்குச் செல்லும் போது, நீங்கள் வழங்கிய ஆலோச னைகளின் பேரில், சிறப்பாக மக்கள் பணியாற்றுகின்றோம் என்று நீங்கள் ஒவ்வொருவரும் சொன்னால், அதுவே எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சி.

தமிழ்நாட்டு மக்களுக்கு துணையா கவும், சட்டம், ஒழுங்கு நிலைநாட்டு வதில், மிகுந்த அக்கறையோடும் நீங் கள் அனைவரும் திட்ட மிட்டு, திறம்பட செயல்பட வேண்டும் என்று வாழ்த்தி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

கலைஞர் பிறந்த நாள் - நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை, கந்திலி கரிகாலன் பங்கேற்பு!

திருவண்ணாமலை, ஜூலை 20-

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், திருவண்ணாமலை சட்ட மன்றத் தொகுதியில் கலை ஞர் பிறந்த நாள் விழா, கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. தெரு முனைக் கூட்டங்களில் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக் டர் எ.வ. வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, கந் திலி கரிகாலன், இளம் பேச்சாளர் கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

18.07.2025 வெள்ளிக்கி ழமை மாலை 6.30மணிக்கு, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளை ஞர் அணி சார்பில், திரு வண்ணாமலை சட்டமன் றத் தொகுதியில் கலைஞர் பிறந்த நாள் விழா, கழக அரசின் நான்காண்டு சாத னைகளை விளக்கி தெரு முனைக் கூட்டம் நடை பெற்றது.

தெருமுனைக் கூட்டத் திற்கு மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் மற் றும் ஒன்றிய செயலாளர் கள் மெய்யூர்.சந்திரன், த. ரமணன், பெ.கோவிந்தன் ஆகியோர் தலைமை வகித் தனர்.

மாவட்ட தி.மு.க. இளை ஞர் அணி துணை அமைப் பாளர் சு.ராஜாங்கம் எஸ். கண்ணதாசன், கோ.ராஜ சேகர், எம்.ரமேஷ், எஸ். சதிஷ்குமார், டி.திலிப் குமார் ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பின ருமான சி.என்.அண்ணா துரை அனைவரையும் வர வேற்றுப் பேசினார்.

திருவண்ணாமலை மாநகரம், அறிவொளிப் பூங்கா, தி.மலை ஒன்றியம், அரடாப்பட்டு ஊராட்சி ஆகிய இடங்களில், கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ. வே.கம்பன், தலைமைக் கழக பேச்சாளர் கந்திலி கரிகாலன், இளம் பேச்சா ளர் கருணாநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

திருவண்ணாமலை ஒன் றியம் மேல்செட்டிப்பட்டு, தண்டராம்பட்டு ஒன்றி யம் கீழ்சிறுப்பாக்கம் ஆகிய இடங்களில் நடை பெற்ற தெருமுனைக் கூட் டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, செல்வி ராதிகா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு ரையாற்றினர்.

மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செய லாளர் ப்ரியா ப.விஜயரங் கன், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க. சௌந்தரராசன்,

மாநகர பகுதி செயலா ளர்கள் சு.விஜி (எ) விஜய ராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புக ழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும்

நகர நிர்வாகிகள் சி.சண் முகம், மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாசலம், ஜீவ ரேகா விஜயராஜ், மாவட்ட பிரதிநிதிகள் இல.குணசே கரன், அ.கண்ணன், கோல்டு.பிரபு, ஹக்கிம் சேட், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் தே.மஞ்சுநாதன், கு. வினோத்குமார், பா.அன்ப ழகன், இரா.சதீஷ், ச. சூரியா, மா.ஸ்டாலின், ரவிச்சந்திரன், நகர இளை ஞர் அணி துணை அமைப் பாளர்கள் சச்சின் சபரி, கீழ்நாத்தூர் ராஜேந்திரன், மு.சூரியபிரகாஷ், ப.கிஷோர், ஆ.சீனுவாசன், க.சந்தோஷ், எம்.எஸ். டி.மணி, ஆ.யாதீஸ்வரன், சா.ரகுநாத், ஒன்றிய துணை அமைப்பாளர்கள் இரா.விக்ரம், ஆர்.கார்த் திக், ஜெயக்குமார், து.சிவ னேசன், ஆர்.பாலசுந்தர் த.பவுன்குமார், ம.ராமச் சந்திரன், கோ.லட்சுமி நாராயணன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கஸ்தூரி, ராஜேஸ்வரிகலிய மூர்த்தி, மாமன்ற உறுப்பி னர்கள் ஆண்டாள்செல்வ ராஜ், மெட்ராஸ் கே. சுப்பிரமணி, பி.ஆர்.நாக ராஜ், க.பிரகாஷ் மற்றும் வட்ட செயலாளர்கள் செ. எழில்மாறன், அ.கஜபதி, வி.எஸ்.ரவீந்திரன், ம.வினோத்குமார், எஸ். கே.டி.வீரா, தே.சங்கர், கு.காளிதாஸ், ஆர்.சசி(எ) கௌதமன், சென்னை. சுரேஷ் உட்பட ஏராளமா னோர் கலந்து கொண்ட னர்.

நிறைவாக மாநகர இளைஞர் அணி அமைப் பாளர் மண்டி ஆ.பிர காஷ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் எம்.ஜி.எஸ்.இளவரசன், மூ.கார்த்தி, செ.விஜய மூர்த்தி ஆகியோர் நன்றி கூறினர்.

முன்னதாக செல்லங் குப்பம் சுப்பிரமணியின் நாட்டுப்புற இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

கோவை காந்திபுரத்தில் ரூபாய் 300 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் பெரியார் நூலக கட்டுமானப் பணிகளை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டார். உடன் மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகவளாகத்தில் இளையோர் நலன் மற்றும் அதிகாரப்படுத்துதல் மையத்தின் சார்பில் துணைவேந்தர் முனைவர் க.ரவி தலைமையில் நடைபெற்ற சுற்றுச்சூழல் பாதுகாப்பு 2000மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், சிவ.வீ.மெய்யநாதன், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், எம்.பி.க்கள் கார்த்தி ப.சிதம்பரம், நவாஸ் கனி, சட்டமன்ற உறுப்பினர எஸ்.மாங்குடி, மாவட்ட ஆட்சியர் திருமதி கா பொற்கொடி, சிவகங்கை மறை, மாவட்ட ஆயர் லூர்து ஆனந்த் மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.